வகுப்பு - 9

பாடம் : தமிழ்

## இயல் - 1

### (திராவிட மொழிக்குடும்பம்)

### குறுவினா

**1 இந்தியாவில் எத்தனை மொழிக்குடும்பங்கள் உள்ளன ? அவை யாவை?**

இந்தியாவில் நான்கு மொழிக்குடும்பங்கள் உள்ளன. அவை.

1. இந்தோ - ஆசிய மொழிகள்
2. திராவிட மொழிகள்
3. ஆஸ்திரோ ஆசிய மொழிகள்
4. சீனா - திபெத்திய மொழிகள்

**2. திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் யார்?**

திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர், குமரிலப்பட்டர்.

**3. தமிழின் தனித்தன்மை குறித்துக் கால்டுவெல் குறிப்பிடுவன யாவை?**

தமிழ், வடமொழியாகிய சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தது அன்று : தனிக்குடும்பத்தைச் சேர்ந்தது. சமஸ்கிருதக் கலப்பின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் தமிழுக்கு உண்டு. தமிழுக்கும் பிற இந்திய மொழிகளுக்கும் தொடர்பு இருக்கலாம்.

### சிறுவினா

**1. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது.?**

நாங்கள் பேசும் மொழி தென் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது.

Pinkz Public School
Next Generation School

**2. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

**திராவிட மொழிகளின் மூன்று பிரிவுகள்:**

1. தென் திராவிட மொழிகள்
2. நடுத் திராவிட மொழிகள்
3. வட திராவிட மொழிகள்

இந்தப் பகுப்பு, மொழிகள் பரவிய நிலத்தை அடிப்படையாகக்கொண்டு பகுக்கப்படுகின்றன.

**தமிழ்:**

பழமையும் வளமையும் நிறைந்த தமிழ்மொழியில் ஒரே பொருளைக்குறிக்கப் பல சொற்களமைந்த சொல்வளமும் பொருள் வளமும் நிறைந்துள்ளன.

தமிழ்மொழி உலக மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்குகிறது. தனித்தியங்கும் ஆற்றல் கொண்டுள்ளது. காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தன்மையதாய் உள்ளது.

**மலையாளம்:**

கேரளத்திலும், இலட்சத்தீவிலும் பேசப்படும் மொழி மலையாளம். மலையாள மொழிக்கு டாக்டர் குண்டர்ட் இலக்கண நூலும் அகராதியும் எழுதியுள்ளார். தென் திராவிட மொழிகளுள் தமிழும், மலையாளமும் மிகப் பிற்காலத்தே பிரிந்தன.

**கன்னடம்**

கர்நாடக மாநிலத்திலும் மராட்டிய மாநிலத்தின் தென்பகுதியிலும் பேசப்படும் மொழி கன்னடமாகும்.

கன்னட மொழியில் தேவாங்கா கன்னடம், கௌடா கன்னடம் உள்ளிட்ட நான்கு வட்டார வழக்குகள் உள்ளன.

**துளு**

துளு மொழியைத் திருந்திய மொழி என்று டாக்டர் கால்டுவெல் கூறியுள்ளார்.

துளு மொழிக்கு வரி வடிவம் இல்லை.

பேசில் மிஷனைச் சேர்ந்த பாதிரியார்கள் துளு மொழியில் பல நூல்களை எழுதியுள்ளனர். அவற்றைக் கன்னட வரிவடிவில் அச்சிட்டனர்.

**இருளா**

நீலகிரி மலைப்பபகுதியில் வாழும் பழங்குடி மக்களான இருளர் பேசும் மொழி இருளா ஆகும்.

குறும்பா, படகா மொழிச்சொற்கள் இருளா மொழியில் அதிகமாகக் கலந்துள்ளன.

**கொடகு(குடகு)**

கொடகு மொழிக்கென்று எழுத்து வடிவம் இல்லை.

மேஜர் கோல் இலக்கணத்தையும், பல பாடல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

**கோடா**

நீலகிரி மலைப்பகுதியில் வாழும் பழங்குடி இனத்திரான கோடர்கள் பேசும் மொழி.

கோடா மொழியை டாக்டர் எமனோ விரிவாக ஆய்ந்துள்ளார்.

**3. காலந்தோறும் தமிழ் மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக்கொள்கிறது?**

**அ. தனித்தியங்கும் தமிழ்**

பிற மொழிகளின் தாக்கத்தை மிகவும் குறைவாகவே பெற்றது தமிழ் மொழி. எனவே பிற மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் பெற்று விளங்குகிறது. உதாரணமாக சாப்ட்வேர் என்பது "மென்பொருள்" என்றும் ப்ரௌசர் என்பது "உலவி" என்றும் தமிழ்ப்படுத்தி புதுப்பித்துக் கொள்கிறது.

**ஆ. மாறாத மொழி தமிழ்**

தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள் பிற திராவிட மொழிகளில், 'ஒலி இடம் பெயர்தல்' என்னும் விதிப்படி மாறியுள்ளன. சுட்டுப்பெயர்களும், மூவிடப் பெயர்களும் பெரும்பாலும் இந்த மாறுதல் ஏற்படவில்லை.

**இ. கலைச்சொல்லாக்கம் உடைய மொழி தமிழ்**

மூலத்திராவிட மொழியின் பண்புகளைப் பேணிப் பாதுகாத்து வரும் மொழி தமிழாகும். அது பிறமொழிச்சொற்களை அப்படியே ஏற்றுத் தன்னைச் சிதைத்துக் கொள்வதில்லை. கலைச்சொல்லாக்கத்தைத் தன்னிடம் கொண்ட மேன்மையான மொழி தமிழ்மொழி. உதாரணமாக லேப்டாப் என்பது "மடிக்கணினி" என்று தமிழ்ப் படுத்தப்படுகிறது.

**ஈ. காலந்தோறும் புதுப்பித்துக் கொள்ளும்மொழி தமிழ்**

மருத்துவம், பொறியியல், விண்வெளித்துறை ஆகியவற்றில் புதிய ஆட்சிச் சொற்களை உருவாக்கிக் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. தமிழ் மொழி.

**உ. புதிய சொல்லாக்கங்களை உருவாக்கிக்கொள்ளும் தமிழ்**

கம்ப்யூட்டர் என்னும் புதிய கருவியைக் கணிப்பொறி எனக் குறிப்பிட்ட தமிழ், காலப்போக்கில் கணினி என்று சுருக்கமாகவும் எளிமையாகவும் பெயரிட்டு வழங்கி வருகிறது. இவ்வாறு புதிய புதிய சொல்லாக்கங்கள் மூலம் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. தமிழ்மொழி.

# 2. தமிழோவியம்

**சிறுவினா**

**1. புதுக்கோலம் புனைந்து தமிழை வளர்ப்பாய் - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.**

தமிழ்மொழி இலக்கண, இலக்கிய வளம் பெற்ற மொழி, வாழ்க்கைக்கு வழிகாட்டும் நீதியைச் சொன்ன திருக்குறள் தோன்றிய மொழி, சமயங்களைப் போற்றி வளர்த்த மொழி, புதிய சிந்தனைகளுக்கு வழிவிட்ட சித்தர் மரபு போற்றிய மொழி, மொழி குறித்துக் குறைகள் சொல்லிக் கொண்டிருக்காமல் புதியன படைத்துத்தமிழை வளர்ப்போம்.

**தமிழ் வளர்ச்சிக்கு எனது பங்களிப்பு.**

- தமிழ் அறிந்தோரிடம் தமிழில் மட்டுமே பேசுவேன்.
- பேசும்போது ஆங்கிலம், வடமொழி ஆகியன கலந்து பேசாமல் தூய தமிழில் பேசுவேன்.
- தமிழைப் பிழையில்லாமல் உச்சரிப்பேன். பிழையில்லாமல் எழுதுவேன்.
- புதிய சொற்களுக்குப் பொருளைத் தெரிந்து கொண்டு, அச்சொற்களைப் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவேன்.
- அஞ்சலகம், வங்கி உள்ளிட்ட இடங்களில் தமிழிலேயே பேசுவேன். அவ்விடங்களில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை அறிந்து கொள்வேன்.
- பேச்சிலும், எழுத்திலும் தமிழைப் பயன்படுத்தினால் தமிழ்மொழி வளரும். எனவே தமிழை இவ்வாறு வளர்க்க முற்படுவேன்.

Next Generation School

# 3. தமிழ் விடு தூது

## குறுவினா

**1. கண்ணி – என்பதன் விளக்கம் யாது?**

இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர். அதுபோலத் தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்டு, எதுகையால் தொடுக்கப் படும் செய்யுள் வகைக்குக் 'கண்ணி' என்று பெயர்.

## சிறுவினா

**1 'தூது அனுப்பத்தமிழே சிறந்தது'- தமிழ் விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.**

**i). சொக்கநாதருக்குத் தூது சென்ற தமிழ்**

மதுரையில் கோவில் கொண்டுள்ள சொக்கநாதப் பெருமான் மீது விருப்பம் கொண்ட பெண்ணொருத்தி, தன் அன்பை வெளிப்படுத்தி வருமாறு தூது அனுப்ப, அவள் தேர்ந்தெடுத்தது தமிழ் மொழியைத்தான்.

**ii) தூது செல்வோரின் தகுதி**

தூது செல்பவர் பல்வேறு திறனுடையாராய் இருக்க வேண்டும். அவர் இனிமையாய், இலக்கியச்சுவையோடு, நலமும் அழகும் குறையாமல் செய்தியைத் தெரிவிப்பவராய் இருத்தல் வேண்டும். தாம் கூற வரும் செய்தியைக் குற்றம் குறைவின்றித் தெளிவாய் எடுத்துக்கூறும் திறன் படைத்தவராய் இருத்தல் வேண்டும். அப்போது தான் தூது சென்றதற்கான பயன் கிடைக்கும். தமிழ்மொழி மேற்கூறிய சிறப்புகளை உடையது. அத்திறன்களோடு கூடவே, இனிய பாச்சிறப்பும் பெற்றிருப்பதால், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையம்பதித் தலைவன் சொக்கநாதப் பெருமானிடம் தூது செல்லும் அனைத்துத் தகுதிகளையும் பெற்றுத் திகழ்கிறது. தமிழ், இவற்றைக் கருதியே சொக்கநாதப்பெருமானிடம் தூதாகத்தமிழை அனுப்புகிறாள், தலைவி.

# 4. வளரும் செல்வம்

**சிறுவினா**

1. **'வளரும் செல்வம்' உரையாடலில் குறிப்பிடப்படும் பிற மொழிச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்கு இணையான தமிழ்ச்சொற்களைப் பட்டியலிடுக.**

| | | | |
|---|---|---|---|
| **லேப்டாப்** | - மடிக்கணினி | **சாப்ட்வேர்** | - மென்பொருள் |
| **ப்ரௌசர் -** | உலவி | **க்ராப்** | - செதுக்கி |
| **கர்சர்** | - ஏவி அல்லது சுட்டி | **சைபர்ஸ்பேஸ் -** | இணையவெளி |
| **சர்வர்** | - வையக விரிவு வலைவழங்கி | **ஃபோல்டர்** | - உறை |
| **நேவி** | - நாவாய் | **எறுதிரான்** | - எறிதிரை |
| **கலயுகோய்** | - கலன் | **நீரியோஸ்** | - நீர் |
| **நாயு** | - நாவாய் | **தோணீஸ்** | - தோணி |
| **பாய்யியோனா-** | பா | | |

---

## தொடர் இலக்கணம்

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மொழியைப்பிழையின்றி பேசவும், எழுதவும் துணைப்புரிவது **இலக்கணம்.**
2. தமிழ் இலக்கணம் _____________ வகைப்படும். அவை யாவை?

   **ஐந்து (எழுத்து, சொல், பொருள், யாப்பு , அணி)**
3. சொல் எத்தனை _____________ வகைப்படும். அவை யாவை?

   **நான்கு (பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்)**
4. பெயரைக் குறிக்கும் சொல் **பெயர்ச்சொல்.**
5. வினை (செயல்) யைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்.**
6. பெயர்ச்சொல்லுக்கும், வினைச்சொல்லுக்கும் இடைப்பட்டு நிற்பது **இடைச்சொல்.**

7. செய்யுளுக்கே உரியச்சொல் **உரிச்சொல்.**

8. இரண்டு முதலானப் பல சொற்கள் தொடர்ந்து நிற்பது **தொடர்.**

9. ஒரு தொடர் அமைய தேவையான உறுப்புகள்.

**மூன்று (1. எழுவாய் 2. செயப்படுபொருள் 3. பயனிலை)**

10. ஒரு தொடர் எழுதக் காரணமாக உள்ள பெயரை **எழுவாய்** என்கிறோம்.

11. எழுவாயாக வரும்சொல் **பெயர்ச்சொல்.**

12. முருகன் பாடம் படித்தான் - இதில் எழுவாய் **முருகன்.**

13. ஔவையார் பாட்டுப்பாடினாள் - இதில் எழுவாய் **ஔவையார்.**

14. எழுவாய் செய்யும் தொழிலை ஏற்கும் சொல் **செயப்படுபொருள்.**

15. இரண்டாம் வேற்றுமைப் பெயர்ச்சொல்லாகவே வருவது **செயப்படுபொருள்.**

16. இராமன் வீட்டைக் கட்டினான். - இதில் செயப்படுபொருள் **வீட்டை.**

17. சீதைக்காட்டுக்குச் சென்றாள் - இதில் செயப்படுபொருள் **காட்டுக்கு** .

18. எழுவாய் செய்யும் தொழிலைக் காட்டி வாக்கியத்தின் பொருளை முடித்து நிற்கும் சொல் **பயனிலை.**

19. ஒரு வாக்கியத்தில் பொருள் முடித்து நிற்கும் வினைச்சொல் **பயனிலை.**

20. கம்பன் கவிதை எழுதினான் - இதில் பயனிலை **எழுதினான்.**

21. கண்ணகி மதுரையை எரித்தாள் - இதில் பயனிலை **எரித்தாள்** .

22. **செயப்படுபொருள்** இல்லாமலும் எழுவாய், பயனிலையோடு தொடர் அமையலாம்.

23. கபிலன் சாப்பிட்டான் - இதில் இருக்கும் உறுப்புகள் **எழுவாய், பயனிலை.**

24. ஒரு தொடரில் எழுவாய் வெளிப்படையாக தெரியாமல் இருந்தால்

**தோன்றா எழுவாய்.**

25. படித்தான் - என்பது எழுவாய் **தோன்றா எழுவாய்.**

26. பயனிலை எங்கு வரும் **இறுதி (கடைசியில் வரும்).**

27. பயனிலை 3 வகைப்படும் அவை யாவை?

**i) வினைப்பயனிலை ii) பெயர்ப்பயனிலை iii) வினாப்பயனிலை.**

28. பயனிலை வரவேண்டிய இடத்தில் வினைமுற்று வந்தால் அது **வினைப்பயனிலை.**

29. செல்வி நடந்தாள் என்பது **வினைப்பயனிலை.**

30. பயனிலை வரவேண்டிய இடத்தில் பெயர் வந்தால் **பெயர்ப்பயனிலை.**

31. நடந்தாள் செல்வி – என்பது **பெயர்ப்** பயனிலை.

32. ‘பயனிலை’ வரவேண்டிய இடத்தில் வினா வந்தால் **வினாப் பயனிலை.**

33. வந்தவள் யார் ? என்பது **வினாப் பயனிலை.**

34. ஒன்றைச் சிறப்பிக்கக் கூறுவது அடைமொழி **இது அடை எனவும் கூறுவர்.**

35. அடை 2 வகைப்படும் அவை யாவை? **அ) பெயரடை ஆ) வினையடை.**

36. எழுவாயாக வரும் பெயர்ச்சொல்லுக்கு அடையாக வருவது **பெயரடை.**

37. சிபி நல்ல பையன் - இ∴து - அடை **பெயரடை.**

38. சரிதா நல்ல மாணவி - இ∴து - அடை **பெயரடை.**

39. வினைப்பயனிலைக்கு அடையாக வருவது **வினையடை.**

40. பாரி வேகமாக ஓடினான் - இ∴து - அடை **வினையடை.**

41. கனிமொழி மெல்ல பேசினாள் - இ∴து - அடை **வினையடை.**

42. வினை 2 வகைப்படும் அவை யாவை? **அ) தன் வினை ஆ) பிறவினை.**

43. ஒரு செயலைத் தானே செய்தால் அது **தன்வினை.**

44. சிவன் ஓவியம் வரைந்தான் - இது **தன்வினை.**

45. ஒரு செயலைப் பிறரைச் செய்ய வைத்தால் அது **பிறவினை.**

46. சிவன் ஓவியத்தை வரைவித்தான் - இது **பிறவினை.** .

47. பிறவினை விகுதிகள் **வி.பி.** ஆகும்.

48. ஒரு செயல் செய்பவனை முதன்மைப்படுத்துவது **செய்வினை.**

49. செயப்படுபொருளை முதன்மைப்படுத்துவது **செயப்பாட்டு வினை.**

50. தேன்மொழி பாட்டு பாடினாள் - இது **செய்வினை .**

51. பாட்டு தேன் மொழியால் பாடப்பட்டது - இ∴து **செயப்பாட்டு வினை.**

52. (படு, பட்டது, உண், பெறு) - போன்ற துணை வினைகளைப் பெற்று வருவது - **செயப்பாட்டு வினை.**

53. ‘பதம்’ என்ற சொல்லுக்குப் பொருள் **சொல்.**

54. பதத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர். **மொழி, கிளவி, சொல்** ஆகும்.

55. பதம் 2 வகைப்படும். அவை **பகுபதம், பகாப்பதம்.**

56. பகுக்கக் (பிரிக்க) கூடியது - **பகுபதம்.**

57. பகுக்கக் (பிரிக்க) முடியாதது - **பகாப்பதம்.**

58. பகுபதம் 2 வகைப்படும். அவை **i) பெயர்ப்பகுபதம், ii) வினைப்பகுபதம்.**

59. பகாப்பதம் 4 வகைப்படும். அவை.

**i) பெயர்ப்பகாப்பதம்** **ii) வினைப்பகாப்பதம்**

**iii) இடைப்பகாப்பதம்** **iv) உரிப்பகாப்பதம்**

60. பகுபத உறுப்புகள் 6 வகைப்படும். அவை.

**i) பகுதி** **ii) விகுதி** **iii) இடைநிலை**

**iv) சந்தி** **v) சாரியை** **vi) விகாரம்**

61. சொல்லின் முதலில் நிற்கும் உறுப்பு, கட்டளை (பகாப்பதமாக) அமையும் உறுப்பு **பகுதி.**

62. பகுதியின் வேறு பெயர் **முதனிலை.**

63. இறுதிநிலை என்று அழைக்கப்படும் உறுப்பு **விகுதி.**

64. காலம் காட்டும் உறுப்பு **இடைநிலை.**

65. பகுதிக்கும், இடைநிலைக்கும் இடையில் வருவது **சந்தி.**

67. இடைநிலைக்கும், விகுதிக்கும் இடையில் வருவது **சாரியை.**

68. பகுதி, சந்தியில் ஏற்படும் மாற்றம் **விகாரம்.**

69. ஆண்பால் வினை முற்று விகுதிகள் **அன், ஆன்.**

70. பெண்பால் வினை முற்று விகுதிகள் **அள், ஆள்.**

71. பலர்பால் வினை முற்று விகுதிகள் **அர், ஆர்.**

72. ஒன்றன் பால் வினை முற்று விகுதிகள் **து, று.**

73. பலவின்பால் வினை முற்று விகுதிகள் **அ, ஆ.**

74. தன்மை, ஒருமை வினை முற்று விகுதிகள் **என், ஏன்.**

75. தன்மை பன்மை வினை முற்று விகுதிகள் **அம், ஆம், எம், ஏம்.**

76. முன்னிலை ஒருமை வினை முற்று விகுதிகள் **ஐ, ஆய், இ.**

77. முன்னிலை பன்மை வினை முற்று விகுதிகள் **இர், ஈர்.**

78. பெயரெச்ச விகுதிகள் **அ, உம்.**

79. வினையெச்ச விகுதிகள் **உ, இ.**

80. வியங்கோள் வினை முற்று விகுதி **க, இய, இயர்.**

81. தொழிற்பெயர் விகுதிகள் **தல், அல், ஐ, கை. சி, பு.**

82. த், ட், ற் இன் - **இறந்த கால இடைநிலைகள்.**

83. கிறு, கின்று, ஆநின்று - **நிகழ்கால இடைநிலைகள்.**

84. ப், வ், க் - **எதிர்கால இடைநிலைகள்.**

85. இல், அல், ஆ - **எதிர்மறை இடைநிலைகள்**

86. ஞ், ந், வ், ச், த் **பெயர் இடைநிலைகள்.**

87. சாரியை இடத்தில் த் வந்தால் **எழுத்துப்பேறு.**

88. வந்தனன் + வா (வ) + த் (ந்) + த் + அன் + அன்

வா - பகுதி - (வ) - **விகாரம்**

த் - சந்தி - (ந்) - **விகாரம்**

த் - **இறந்தகால இடைநிலை**

அன் - **சாரியை**

அன் - **ஆண்பால் வினைமுற்று விகுதி**